
# திராவிடத்தால் வாழ்கிறோம்

985

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

30

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# சாதி ஒழிப்புக் கிளர்ச்சியில் மணல்மேடு!

சாதி ஒழிப்புக்காக உயிர்த்தியாகம் புரிந்த வீரர்கள் பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி.



தமிழ்நாடு கண்ட போராட்டக் களங்களில் மிகவும் தனித்துவமான வரலாற்றைக் கொண்ட போராட்டம் என்றால், 1957-இல் நடைபெற்ற சட்ட எரிப்புப் போராட்டம்தான். 10,000 க்கும் மேற்பட்டோர் அரசியல் சட்டத்தைக் கொளுத்தி, 3,000 க்கும் மேற்பட்டோர் கைதாகி, சிறைக்குள்ளேயும் வெளியேயும் 17 பேர் உயிர்நீத்த தீர வரலாறு நிறைந்த போராட்டக் களம் அது. இந்த ஜாதி ஒழிப்புப் போரில் ஈடுபட்டு, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்ட ராமசாமி எட்டாவது நாளிலும், வெள்ளைச்சாமி 10-வது நாளிலும் மாண்டனர். கெட்டுப்போன உணவும், சிறைத்துறையின் கொடும் தாக்குதலும் அவர்கள் உயிரைப் பறித்தது. பெரியார் அப்போது சிறையில் இருந்தார். அன்றைய முதல்வர் காமராசரை சந்தித்துப் போராடி உடல்களைப் பெற்றார் மணியம்மையார்.

ராமசாமி பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர், வெள்ளைச்சாமி மணல்மேடு பகுதியைச் சேர்ந்தவர். இருவரின் உடல்களுக்கும் லட்சக்கணக்கானோர் திருச்சியில் வீரவணக்கம் செலுத்தி, அடக்கம் செய்யப்பட்டது. அதில் மணல்மேடு வெள்ளைச்சாமி திருமணமாகாத இளைஞர். அந்த இளைஞர் மணல்மேட்டில் இருந்து தனியாகச் சிறைக்கு வரவில்லை. அரசியல் சட்டத்தைக் கொளுத்தி, 20-க்கும் மேற்பட்டோரை சிறைக்கு அனுப்பியது மணல்மேடு கிராமம். சி.ரெங்கையன், எஸ்.சிங்காரம், ஆ.கோவிந்தராசன், ஆர்.டி.வேலு, எல்.மணி, முனுசாமி உள்ளிட்ட அனைவரையும் நூற்றுக்கணக்கானோர் திரண்டு சிறைக்கு வாழ்த்தியனுப்பினர்.

அன்றைக்கு, அவர்களில் பலர் கருப்புச் சட்டை வாங்கக் கூட காசில்லாத ஏழைகள். படிப்பறிவு இல்லை. நிரந்தர வேலை இல்லை. செங்கல் சூளை , வெள்ளரிக் காய் விற்பனை, மூட்டை தூக்குவது, விவசாயக் கூலி என வாழ்ந்தவர்கள். ஆனாலும் மயிலாடுதுறை, சீர்காழியைச் சூழ்ந்திருந்த சுயமரியாதைப் புயல் மணல்மேட்டையும் தாக்கியது. 1944-இல் சேலத்தில் திராவிடர் கழகம் உருவானபோதே அங்கொன்றும் இங்கொன்றுமாக மணல்மேட்டில் திராவிடர் கழகத் தோழர்கள் உருவாகியிருந்தனர். வைக்கத்தில் பெரியார் நடத்திய போராட்டத்தின் ஈர்ப்பால் அவர்கள் இயக்கமாகியிருந்தனர்.

"மூடநம்பிக்கை எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தினர். பாகுபாடின்றி அனைத்து மதங்களின் மூட நம்பிக்கைகளையும் தோலுரித்தனர்."

1952-இல் உருவாகி, டெல்டா பகுதிகள் முழுவதும் காட்டுத்தீ போல பரவிய திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் மணல்மேட்டையும் விட்டுவைக்கவில்லை. தங்கள் சுயமரியாதையைக் காக்க வந்த ஆயுதமாக அச்சங்கத்தை இறுகப் பற்றிக்கொண்டனர். ஊரில் வாசிக்கத் தெரிந்த ஒருசிலரை வைத்து 'விடுதலை'யை வாசித்து விடுவார்கள். அந்த ஊரைச் சேர்ந்த சாரங்கபாணி விடுதலையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். சுற்றுப்புறங்களில் எங்கு கூட்டம் நடந்தாலும் செல்வது, சாதி ஒழிப்புக் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது கலகக்காரர்களாகச் சுற்றிச்சுழன்றனர். அந்தக் கொள்கை உணர்ச்சிதான் அவர்களை 1957-இல் சட்டத்தை எரிக்கச் செய்தது.

கொடுஞ்சிறையில் வெள்ளைச்சாமி மறைந்த பிறகு, அவரது குடும்பமே சிதைந்துபோனது. அவரது அம்மாவும் அக்காவும் மனநலம் பாதிக்கப்பட்டு மரணமடைந்தனர். பலர் வீட்டை இழந்து, வாழ்வு சிதைந்து சொல்லொணா துயருக்கு ஆளாகினர். வெள்ளைச்சாமி நினைவு மாநாட்டையும் அதே ஊரில் நடத்தினர். நினைவுச்சின்னம் ஒன்றும் எழுப்பினர். 1980-களிலும் அங்கு கொள்கைப் பிரச்சாரங்கள் தொய்வில்லாமல் தொடர்ந்தன. மூடநம்பிக்கை எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தினர். பாகுபாடின்றி அனைத்து மதங்களின் மூட நம்பிக்கைகளையும் தோலுரித்தனர். மக்களைக் கல்வியை நோக்கி திசைதிருப்பினர். படிப்பகம் அமைத்து வாசிப்பை வளர்த்தனர். அடுத்த இருபது ஆண்டுகளில் மணல்மேட்டில் காட்சிகள் மாறின. கற்றோர் எண்ணிக்கை பெருகியது. களச்சூழல் மாறியது.

...பயணிப்போம்.

## அரசியலமைப்பைக் காப்பாற்றினால், காலணி வீசப்படுமா?

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கவாய் மீது காலணி வீசி அவமதித்த இந்துத்துவ சிந்தனை கொண்ட வழக்கறிஞர் ராகேஷ், "தலைமை நீதிபதி மீது காலணி வீசியது நானல்ல, கடவுள்தான் அதைச் செய்தார். இது கடவுளின் கட்டளை, ஒரு செயலுக்கான எதிர்வினை. தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் சனாதன தர்மத்தை அவமதித்துவிட்டார். இதன் காரணமாகவே அவர்மீது காலணியை வீசினேன்" என்று மிகத் தரம் தாழ்ந்து பேசினார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் உட்பட பலரும் இச்செயலைக் கண்டித்திருக்கிறார்கள்.

இச்சம்பவம் குறித்து, தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள தி.மு.க. மாணவர் அணியின் மாநில துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன், "நீதிபதி கவாய் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால், பா.ஜ.க. அவமதிக்கிறது. மே மாதம் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்ற கவாய், அதே மாதம் 18-ஆம் தேதி மகாராஷ்டிரா சென்றார். அதாவது, மகாராஷ்டிரா பார் கவுன்சில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிக்குச் சென்றார். ஆனால், அந்த நிகழ்ச்சியில் மகாராஷ்டிர மாநில அரசு சார்பில், ஒருவர்கூட கலந்து கொள்ளவில்லை.

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றதற்கு அந்த அரசு எந்தவித மரியாதையையும் அளிக்கவில்லை. அதே நிகழ்ச்சியில், அவரே இதைச் சுட்டிக்காட்டவும் செய்தார்.

கவாய் மீது பா.ஜ.க.வால் இந்தியா முழுவதும் பரப்பப்படும் கருத்தாக்கத்திற்கு ஆதரவாகத்தான் இந்த செருப்பு வீசப்பட்டுள்ளது. பெருந்தன்மையாக கவாய் விட்டுவிட்டார் என்றாலும், இந்திய அரசு ஏன் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை? அப்படியென்றால், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவதை மேலும் ஊக்கப்படுத்துவதாகத்தானே அமையும்? தாழ்த்தப்பட்டவர் குடியரசுத் தலைவராகலாம், நீதிபதி ஆகக் கூடாது என்று பா.ஜ.க. எண்ணுகிறதா? அவர்களின் பேச்சைக் கேட்டால், நாட்டின் உயரிய பதவியில் அமர வைக்கப்படுவார்கள். ஆனால், சுயமாகப் படித்து இந்திய அரசியலமைப்பைக் காப்பாற்றும் பதவியில் அமர்ந்தால், காலணி வீசி அவமானப்படுத்துவார்களா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

80

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# உண்மை ஒரு நாள் வெல்லும்!




**தி.மு.க.வுக்குத் தொடர்பே இல்லாவிட்டாலும், அதன்மீது உயிர்ப்பலி, கொலைப்பழி போடுவது காலம் காலமாகத் தொடர்கிறதே?**

தி.மு.க. என்பது ஒரு ஜனநாயக இயக்கம். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மக்களுடன் பயணிக்கும் இயக்கம். அதனால், எந்த ஒரு அவதூறோ, பழியோ சுமத்தப்பட்டால், தி.மு.க. தலைமை அதற்குரிய விளக்கத்தை அளிக்கக்கூடிய இயக்கமாக இருக்கிறது. 1991-இல் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்நாட்டு மண்ணில் படுகொலை செய்யப் பட்டார். அப்போது, தி.மு.க. ஆட்சியில் இல்லை. கவர்னர் ஆட்சி நடந்தது. ஆனால், அப்போதைய அ.தி.மு.க. கூட்டணி, கொலைப்பழியை தி.மு.க. மீது போட்டு, தேர்தல் அரசியலில் பெரும் லாபம் கண்டது. தேர்தல் நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் ஒவ்வொரு கூட்டத்திலும், தன்னிலை விளக்கம் அளித்தார். தி.மு.க. தன்மீது சுமத்தப்பட்டது பொய்ப் பழி என்பதை மக்கள் மன்றத்தில் மட்டுமின்றி, நீதிமன்றத்திலும் நிரூபித்து, 1996-இல் மகத்தான வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தது.

அதே நேரத்தில், 1992-இல் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, கும்பகோணத்தில் நடந்த மகாமகத் திருவிழாவுக்குத் தன் தோழியுடன் சென்று குளித்தபோது, அங்கே ஏற்கெனவே இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டது. குறைந்தபட்சம் 50 பேருக்கு மேல் இறந்தார்கள். உண்மையான கணக்கை அன்றைய ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தவில்லை. இந்த மரணங்களுக்கு, அப்போதைய ஆட்சியாளர்கள் பொறுப்பேற்கவுமில்லை. ஆட்சியாளர் மீதான 'திருஷ்டி கழிந்தது' என்று பரப்புரை செய்தது அ.தி.மு.க. அதுபோலவே, தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்துப் போராட்டம் நடத்திய மக்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது அ.தி.மு.க. அரசு. 13 பேர் கொல்லப்பட்டனர். முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி, "நான் டி.வி பார்த்துத்தான் துப்பாக்கிச் சூடு பற்றித் தெரிந்து கொண்டேன்" என்று பொறுப்பற்றத்தனத்துடன் பேட்டி அளித்தார். ஆனால், தாமிரபரணியில் போலீஸ் நடத்திய தடியடி, உயர்நீதிமன்றத்தில் நடத்திய தடியடி உள்பட தி.மு.க. ஆட்சியில் எந்த ஒரு விதிமீறல் என்றாலும், உடனடியாக அது குறித்து விளக்கம் அளிப்பதும், விசாரணை கமிஷன் அமைப்பதும், சட்ட ரீதியான அனைத்து விசாரணைகளை எதிர்கொள்வதும், உரிய இழப்பீடு வழங்குவதும் தொடர்ச்சியான வழக்கமாக உள்ளது.

அண்மையில், கரூரில் ஒரு கட்சியின் தலைவரான நடிகரைப் பார்க்க வந்து, அந்தக் கட்சியின் நிர்வாகிகளால் அடிப்படை ஏற்பாடுகள்கூட செய்யப்படாத நிலையில், கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்த கொடூரத் துயரமான நிகழ்விலும், பொறுப்பேற்க முன்வராத - பாதிக்கப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் குடும்பத்தினரையும் பார்க்க முன்வராமல், பதுங்கிக்கொண்ட கூட்ட ஏற்பாட்டாளர்கள், தி.மு.க. அரசுமீது பழி போட முயன்றார்கள். முதலமைச்சர் தொடங்கி, அரசு நிர்வாகத்தினர் அத்தனை பேரும் உடனடியாக கரூர் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு நிதி வழங்கியதுடன், அந்தக் கூட்டத்தில் என்ன நடந்தது என்கிற உண்மையை வீடியோ ஆதாரங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளது, தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அரசு. இதுதான் மக்களுக்காகச் செயல்படும் ஜனநாயக அரசியல் இயக்கத்தின் தன்மை.

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகக் குடும்பத் தலைவரைக் குடும்பத்துடன் சந்தித்தேன்!



மீசை.நாகராஜன்

2019-ஆண்டில் கழக நிகழ்ச்சிகளுக்காக மதுரைக்கு வருகை தந்த உலகத் தமிழர்களின் ஒரே நம்பிக்கை, கழகத்தின் குடும்பத் தலைவரை, எனது இணையர் நாகலட்சுமி, பெயர்த்தி மணியம்மையார் ஆகியோருடன் சென்று சந்தித்த மகிழ்வான தருணம். பெயர்த்திக்கு மணியம்மையார் என பெயர் சூட்டியது முத்தமிழறிஞர் கலைஞர் என தலைவரிடம் கூறினேன். வாழ்த்தினார். இந்த நிகழ்வில், மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தின் செயலாளர், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் கோ. தளபதி அவர்கள் அருகில் இருந்தார்.

**– மீசை.நாகராஜன், துணை அமைப்பாளர், மாவட்ட இலக்கிய அணி, மதுரை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### அறிவகத்தில் போலீஸ்!

1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சத்தில் இருந்த நேரம். 27.1.1965 இரவு 1 மணிக்கு, தி.மு.கழக தலைமையகமான அறிவகத்தை போலீசார் முற்றுகையிட்டு சோதனை செய்தனர். வாயிற்காவலர் குப்புசாமி, அவரது மகன் பூபதி, ஊழியர் கண்ணன் ஆகியோர் கைது செய்யப் பட்டனர். 'நம்நாடு' வெளியிடப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், இந்தச் சோதனை செய்யப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131